# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No..96/2022 தேதி- 29.01.2026

(D.W.1) . சிகாமணி

## <u>குறுக்கு விசாரணை</u>

என்னுடைய சத்தியபிரமாண வாக்குமூலத்தில் வாதிக்கு 10 சென்ட் உரிமையுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு உரிமைப்பட்ட 10 சென்ட் இடத்தில் வாதி கட்டுமானம் கட்ட எனக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்றால் அவருக்கு உரிமைப்பட்ட இடத்தில் கட்டுமானம் கட்ட எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. மேற்படி 10 சென்டிற்கு நீதிமன்றம் மூலம் பரிகாரம் கிடைக்க எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் எனது வீட்டிற்கு செல்ல 3 சென்ட் வழிப்பாதை தவிர்த்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. பிளாட் நம்பர் 5ல் அஸ்தீவாரம் கட்டியதாக இருந்தால் நீதிமன்ற ஆணையரை நியமிப்பதில் எதுவும் எனக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்றால் அதற்கு அவசியமில்லை அதனால் நீதிமன்ற ஆணையரை நியமிக்கவில்லை. நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டாம் என்று கூறுவதால் வாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் மேற்கூறிய 3 சென்ட் சொத்தில் வாதி காங்கிரீட் தளம் போட்டுள்ளார்.

வாதி 3 சென்ட் இடத்தை ஆக்கிரமித்ததாக புகாரோ அல்லது வழக்கோ தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதி ஆக்கிரமிப்பு செய்யாததால்தான் வழக்கோ, புகாரோ கொடுக்கவில்லை என்றால் எனது சகோதரர் என்பதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 03.07.2022 அன்று வாதி அத்துமீறி நுழைந்ததாக எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் மேற்படி 3 சென்ட் சொத்து பொதுப்பாதையாகும். என்னுடைய முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.